# பஸ்கொட பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 17 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 மார்ச் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பஸ்கொட பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பஸ்கொட பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது பஸ்கொட வியாபார தொகுதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,326,305 தொகையும் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,120,693 தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த செலவினங்கள் மீளாய்வாண்டின்

இறுதியில் ஐந்தொகையில் காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதியில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முத்திரைக் கட்டண பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ரூபா 4,287,012 தொகையான முத்திரைக் கட்டணம் வருமானமாக கிடைத்திருந்த போதிலும் வருமானச் செலவினக் கணக்கில் ஏனைய வருமானமாக ரூபா 2,800,000 தொகை மாத்திரமே செலவு வைக்கப்பட்டமையினால் வேறுபாடு ரூபா 1,487,012 ஆகக் காணப்பட்டது.

(இ) 2012 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மூலதன உதவிப்பணம் ரூபா 26,123,666 ஆக பிரதான பேரேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 30,684,940 தொகை கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுகளுக்குரியதாகக் கிடைத்திருந்த ரூபா 4,561,274 தொகை உரிய கணக்குகளுடன் சீராக்கப்படாமல் மீளாய்வாண்டின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆயுர்வேத களஞ்சிய இருப்பின் பெறுமதி ரூபா 71,833 தொகையாக இருந்த போதிலும் ஐந்தொகையில் அந்த இருப்பின் பெறுமதி ரூபா 125,905 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் வேறுபாடு ரூபா 54,072 ஆகும்.

### 1.3.2 தீர்க்கப்படாத கணக்குகள்

முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற தீர்க்கப்படாத கணக்கு மீதிகளின் வரவுகளின் கூட்டுத்தொகை ரூபா 490,376 ஆக இருந்ததுடன் செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,267,570 ஆகும்.

### 1.3.3 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

05 கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பேரேட்டின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 85,771,135 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,770,834 ஆனமையால் ரூபா 50,000,301 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 50,128,264 கூட்டுத்தொகையான கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,135,820 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,056,128 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 124 | 81 | 43 |
| (ii) | வாடகை | 3,756 | 3,768 | 12 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 967 | 725 | 242 |
| (iv) | ஏனைய வருமானம் | 22,627 | 16,063 | 5,563 |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 754,517 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா 5,682,726 ஆகவும் காணப்பட்டது.

**2.2.3 விளம்பர அறிவித்தல்**

2012 ஆம் ஆண்டின் வருமானப் பதிவேட்டின் பிரகாரம் காட்சிப்படுத்தப்பட்டு காணப்பட்ட 101 விளம்பர அறிவித்தல்களிலிருந்து ரூபா 31,800 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை.

**2.2.4 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்**

2012 இன் வருமானப் பதிவேட்டின் பிரகாரம் வியாபர அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிட வேண்டிய 787 வியாபார இடங்களிலிருந்து ரூபா 35,865 தொகை 2013 நவம்பர் 01 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 மின் சமிக்ஞைக் கோபுரக் கட்டணம்**

(அ) 2012 ஆம் ஆண்டிற்காக மின் சமிக்ஞை கோபுரக் கட்டணம் அறவிடும் போது 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 150 ஆவது பிரிவின் கீழ் முன்னைய ஆண்டின் பெறுவனவுகளின் அடிப்படையில் கட்டணம் அறவிடுவதற்கு சபை தீர்மானித்திருந்தது. வியாபார வருமானத்தின் பிரகாரம் மின்சமிக்ஞை கோபுரங்களிலிருந்து கட்டணம் அறவிடப்படுகின்ற முறைமை தொடர்பாக அறிமுகப்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்குரிய 2012 சனவரி 13 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கோபுரங்களிலிருந்து கட்டணம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் 12 சமிக்ஞைக் கோபுரங்களிலிருந்து அந்த ஆண்டிற்காக எத்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வீதி விளக்குகளைப் பராமரித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மின்சக்தி, எரிபொருள் அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய பீஈ/01/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த நுகர்வு மற்றும் பொதுச் செயற்பாடுகள் நானாவித நுகர்வுகளின் 3 சதவீத மதிப்பீடு செய்யப்பட்ட வீதி விளக்கு நுகர்விற்காக ஒதுக்க முடியுமாக இருந்த போதிலும் சபை அது தொடர்பாகக் கவனம் செலுத்தியிருக்கவில்லை. சபைக்கு அறவிடவேண்டியிருந்த ரூபா 90,936 தொகை மின்சார சபையிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட (ஆ) இல் குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் சகல வீதி விளக்குகளும் பொருத்துவதற்காக மின்சார சபையின் எழுத்துமூல அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் சபை வீதி விளக்கு பதிவேட்டினை முறையான பிரகாரம் பராமரிக்காமையினால் அங்கீகரிக்கப்பட்ட வீதி விளக்குகளின் எண்ணிக்கையை கணக்காய்வில் வெளிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) பிரிவின் பிரகாரம் விழாக்களை நடாத்துவதற்காக பிரதேச சபை நிதியத்திலிருந்து வருடத்திற்குச் செலுத்தக்கூடிய ஆகக் கூடிய பெறுமதி ரூபா 1,000 ஆக இருந்த போதிலும் அத்தொகையினை விஞ்சி விழாக்களுக்காக ரூபா 33,414 தொகையை சபை செலவிட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 மார்ச் 31 ஆந் திகதிய 08/2005 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் 11.5 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனக் கடனுக்காக வங்கி வட்டி வீதம் மற்றும் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்ட 4 சதவீத வட்டிக்கிடையேயான வேறுபாடு அரசாங்கத்தின் மூலம் மீளளிப்புச் செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் முன்னைய ஆண்டு மற்றும்

மீளாய்வாண்டிற்காக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட வட்டியான ரூபா 46,000 தொகை 2012 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1993 செப்தெம்பர் 03 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற உள்ளூராட்சி சேவை ஊழியர்களின் ஓய்வூதியம் உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதுடன் அந்த உத்தியோகத்தர் சேவையாற்றிய உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து அவருக்குச் செலுத்தப்பட்ட சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு 85%, 70%, மற்றும் 55% என்ற சதவீதத்தின் கீழ் மாதாந்தம் அந்த நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபை 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த ரூபா 1,508,258 தொகையை அவ்வாறு அனுப்பியிருக்கவில்லை.

(இ) 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவை அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனத்திற்குச் செலுத்தப்படுகின்ற மானியங்களிலிருந்து அந்த நிலுவையாக இருந்த தொகையைக் கழிப்பதற்கு நிதியேற்பாடுகள் போதுமானதாக இருந்த போதிலும் மாகாண சபையினால் அந்த நிலுவையாக இருந்த பணத்தை அறவிட்டு அனுப்பப்படாமையினால் நிதியத்தின் கீழ் ஓய்வூதியம் செலுத்தப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்வதற்கு முடியாதிருந்தது.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்